# இறைத்தூதன்
## கத்தோலிக்க வார இதழ்


இயேசு மறுமொழியாக, "எனது ஆட்சி இவ்வுலக ஆட்சி போன்றது அல்ல. அது இவ்வுலக ஆட்சி போன்றதாய் இருந்திருந்தால் நான் யூதர்களிடம் காட்டிக் கொடுக்கப்படாதவாறு என் காவலர்கள் போராடியிருப்பார்கள். ஆனால் என் ஆட்சி இவ்வுலக ஆட்சி போன்றது அல்ல" என்றார். பிலாத்து அவரிடம், "அப்படியானால் நீ அரசன்தானோ?" என்று கேட்டான். அதற்கு இயேசு, "அரசன் என்று நீர் சொல்கிறீர். உண்மையை எடுத்துரைப்பதே என் பணி. இதற்காகவே நான் பிறந்தேன்; இதற்காகவே உலகிற்கு வந்தேன். உண்மையைச் சார்ந்தவர் அனைவரும் என் குரலுக்குச் செவிசாய்க்கின்றனர்" என்றார். (யோவான் 18: 36-37)

# 39வது உலக இளையோர் தினத்திற்கான திருத்தந்தையின் செய்தி



இவ்வாண்டு நவம்பர் மாதம் 24ஆம் தேதி கிறிஸ்து அரசர் பெருவிழாவன்று சிறப்பிக் கப்படும் 39வது உலக இளையோர் தினத்திற்கான செய்தியை இச்செவ்வாய்க் கிழமை, செப்டம்பர் 17ஆம் தேதியன்று வெளியிட்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

'எதிர்நோக்கி இருப்பதில் மகிழ்ச்சி கொள்ளுங்கள்' என்ற தலைப்பு கடந்த ஆண்டின் உலக இளையோர் தினத்திற்கு என எடுக்கப்பட்டதை அச்செய்தியில் சுட்டிக்காட்டியுள்ள திருத்தந்தை, வரும் 2025 யூபிலி ஆண்டிற்கு தயாரிப்பாக, 'ஆண்டவர்மேல் நம்பிக்கை வைத்திருப்பவர் நடந்து செல்வர்; சோர்வடையார்'(எசா 40:31) என்ற எசாயா நூல் வார்த்தைகளை இளையோர் தின கொண்டாட்டங்களின் தலைப்பாக எடுத்துள்ளதாகவும் தெரிவித் துள்ளார்.

**'ஆண்டவர்மேல் நம்பிக்கை வைத்திருப்பவர் நடந்து செல்வர்; சோர்வடையார்' (எசா 40:31)**

இன்றைய உலகில் போர் தரும் துயரங்கள், சமூக அநீதி, சரிநிகரற்ற நிலைகள், மக்களும் இயற்கை வளங்களும் சுரண்டப்படல் என்ற பல்வேறு சூழல்களின் முன்னால் அதிக அளவில் பாதிக்கப்பட்டு, வருங்காலம் குறித்த அச்சத்தைப் பெறுபவர்கள் இளையோரே எனக்கூறும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், மனச்சோர்வு, சலிப்பு ஆகியவைகளின் கைதிகளாக நம்பிக்கையை இழந்து வாழும் இளையோருக்கு நம்பிக்கை யின் செய்தி கிட்ட வேண்டும் என தான் ஆவல் கொள்வதாகவும் தன் செய்தியில் கூறியுள்ளார்.



இவ்வாண்டிற்கான இளையோர் தின தலைப்பில் உள்ள 'நடந்து செல்லலும்' 'சோர்வடையாதிருத்தலும்' என்பதை எடுத்துக்கொண்டு தன் கருத்துக்களைப் பகிர்ந்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், வாழ்வின் பலவேளைகளில் நாம் மனச் சோர்வை சந்திக்கும்போது அங்கேயே நின்று ஓய்வெடுக்க முயலாமல் நம்பிக்கையின் திருப்பயணியாக முன்னோக்கிச் செல்லக் கற்க வேண்டும் என்றார்.

அனைத்து மனச்சோர்வுகளையும் சலிப்பை யும் வெற்றிகொள்ளும் நம்பிக்கையில் நடைபோடுங்கள் என்பது இளையோருக்கு தான் தெரிவிக்க விரும்பும் செய்தி எனக்கூறும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், நல்லதொரு இலக்கை வகுத்துக் கொண்டு அதனை நோக்கி நாம் நடைபோடும்போது, நம் கனவுகளும், திட்டங்களும், அதன் வெற்றிகளும் ஒரு நாளும் இழக்கப்படாது என்ற நம்பிக்கை யையும் வெளியிட்டுள்ளார்.

வாக்களிக்கப்பட்ட நிலத்தை நோக்கி நாம் நடைபோடும்போது பாலைவனத்தில் பல சோதனைகளை சந்திக்க வேண்டியிருக்கும் என்பது குறித்தும், நம் பயணம் சுற்றுலாப் பயணி என்ற நிலையிலிருந்து திருப் பயணியாக உருவெடுக்க வேண்டும் என்பது குறித்தும், திருஅவையின் மறைப்பணிக்காக இளையோரின் பயணம் நம்பிக்கையின் திருப்பயணமாக மாறுவது குறித்தும் தன் செய்தியில் பல்வேறு கருத்துக்களைப் பகிர்ந்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

'இளையோரே, வெளியில் நிகழ்பவற்றைவிட உங்களுக்குள் என்ன நிகழ்கிறது என்பதைக் கூர்ந்து கவனியுங்கள். நீங்களும் உங்களுக் குக் கொடுக்கப்பட்ட இந்த வாழ்க்கையும் ஒரு பெரிய கொடை என்பதை உணருங்கள். அமைதியான நிலையில் உங்கள் உள்ளத்தின் ஆழத்தில் நிகழ்பவற்றைக் குறித்து கடவுளுடன் பேசுங்கள். ஒவ்வொரு நாளும் நீங்கள் சந்திக்கும் நபர்களைப் பற்றியும், உங்கள் பயணத்தில் அவர் உங்களுக்குத் துணையாகக் கொடுத்தவர்களைப் பற்றியும் அவரிடம் உரையாடுங்கள்.

திருத்தந்தை பிரான்சிஸ்

## மலாக்கா-ஜொகூர் மறைமாவட்டத்தின் நிரந்தர திருத்தொண்டர்களின் ஆயரோடான கற்றல் தினம்

ஜொகூர் பாரு: அக்டோபர் 31 அன்று, மலாக்கா ஜொகூர் மறைமாவட்டத்தின் நிரந்தர திருத்தண்டர் கள் ஆயர் பெர்னார்ட் போல் அவர்களுடன் கற்றல் தினத்தையொட்டி இங்குள்ள மஜோடி மையத்தில் ஒன்று கூடினர். இந்தக் கூட்டம், குறிப்பாக கூட்டொருங்கியக்கம் (சினொடலிட்டி) சூழலில், திருத்தொண்டர் குறித்தப் பகுதிகளில் புதுப்பித்தல், கூட்டொருங்கியக்கத்தின் பிரதிபலிப்புகளை எளிதாக்குவதை நோக்கமாகக் கொண்டது. இது நிரந்தர திருத்தொண்டர் மத்தியில் ஒன்றிப்பு மற்றும் ஆயருடன் பயன்மிகு வகையில் நேரத்தை செலவிட ஆகியவற்றை வாய்ப்பாகக் கொள்ளப்பட்டது. முதல் நாள் நற்கருணை ஆண்டவர் முன் காலையில் காலை திருப்புகழ் மாலை தியானத்தோடும் நிகழ்வு தொடங்கியது. இதைத் தொடர்ந்து, சினோடலிட்டி சூழலில் நிரந்தர திருத்தொண்டர்களன் பங்கு மற்றும் எதிர்பார்ப்புகளை மையமாகக் கொண்டு, ஆய்வு அமர்வுகள் நடைத்தப்பட்டன. ஆயர் பெர்னார்ட்டின் தனிப்பட்ட அணுகுமுறை மற்றும் இதயப்பூர்வமான பகிர்வு ஆகியவை திருத்தொண்டர்களை வெகுவாக ஈர்த்தது.



*ஆயரோடான ஒரு நாள் சந்திப்பில் பங்கேற்ற நிரந்தர திருத்தொண்டர்கள்*

முதல் அமர்வில் ஒரு பணியாளரின் வாழ்க்கையானது ஆய்ந்தறிதலை மைய மாகக் கொண்டது என்பது உணர்த்தப் பட்டது. தொடர்ந்து 2-வது அமர்வில், ஆன்மீக உருமாற்றம் வலியுறுத்தப்பட்டது.

மூன்றாவதாக, மறைமாவட்டத்தில் கூட் டொருக்கியக்கத்தில் திருத்தொண்டர்களின் தீவிர பங்கு பற்றி ஆலோசிக்கப்பட்டது. ஆயர் திருத்தொண்டர்கள் உண்மையாகவும் புனிதத்தன்மையோடும் இருப்பதன் அவசி யத்தை வலியுறுத்தினார்.

நிறைவாக, நம்பகத்தன்மை, நேர்மை மற்றும் பணிவு ஆகிய முப்பண்புகளை தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும் என்று ஆயர் திருத்தொண்டர்களைக் கேண்டு கொண் டார்.

*செய்தி தமிழாக்கம் : ஆர்.கே.*

# மறைக்கல்வி ஆசிரியர்கள் பங்கேற்ற அடிப்படை இறையியல் உருவாக்கப் பயிற்சி

"கத்தோலிக்க திருஅவையின் மறைக்கல்வி நூல் ஊடாகப் பயணம்" (“Journey Through the Catechism of the Catholic Church”) என்ற தலைப்பில் அடிப்படை இறையியல் கற்றலை முடித்த அறுபத்தைந்து பங்கேற்பாளர்களுக்கு, கடந்த நவம்பர் 9, 2024 அன்று பங்கேற்புச் சான்றிதல் வழங்கப்பட்டது. கோலாலம்பூர் உயர் மறைமாவட்ட மறைக்கல்வி பணியகம் ஏற்பாடு செய்த இப்பயிற்சியின் நோக்கம் பங்கேற்பாளர்களுக்கு கத்தோலிக்க நம்பிக்கை பற்றிய புரிதலை டாக்டர் லோரன்ஸ் எங், அருள்பணி லெனார்ட் லெக்சன், அருள்பணி மைக்கேல் சுவா மற்றும் டாக்டர் ஸ்டீவன் செல்வராஜூ ஆகியோர் அடங்குவர்.

இந்த பத்து மாத பாடத்திட்டம் கத்தோலிக்க திருஅவையின் மறைக்கல்வி நூலின் நான்கு பகுதிகளை உள்ளடக்கியது. அவை: நம்பிக்கை அறிக்கை’ (நம்பிக்கை), ‘மறை உண்மைகளைக் கொண்டாடுதல் (கிறிஸ்துவில் வாழ்வு), கிறிஸ்தவ நன்னெறி வாழ்க்கை’ (கட்டளைகள்) மற்றும்



*மறைக்கல்வி ஆசிரியர் பங்கேற்ற சோர்வகற்றும் அதிரடி பயிற்சி*

முறையாக வழங்குவதும், கத்தோலிக்க மறைக்கல்வி நூலில் சுய ஆய்வு, பாடம் திட்டமிடல் போன்றவைற்றைக் கற்றறிவதாகும்.

மொத்தத்தில், இப்பயிற்சியானது, பத்து அமர்வுகளை உள்ளடக்கியதாக அமைந்தது. அவை மாதம் ஒருமுறை பிப்ரவரி முதல் நவம்பர் வரை சனிக்கிழமைகளில் நடத்தப்பட்டன. அவற்றில் இரு பயிற்சிகள் இயங்கலை வாயிலாகவும், மற்றவை நேரடி வகுப்புகள் கொண்ட அமர்வுகளாகவும் இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த பிப்ரவரி, 2024 இல் தொடங்கப்பட்ட இப்பயிற்சித் திட்டம், முக்கியமாக பங்கு மறைக்கல்வி ஆசிரியர்களை இலக்காகக் கொண்டது. இருப்பினும் மறைக்கல்வி ஆசிரியர்கள் அல்லாதவர்களும் கலந்து கொள்ள அழைக்கப்பட்டனர். அமர்வுகள் அனைத்தும் மறைக்கல்வி துறையில் அனுபவம் வாய்ந்த பேச்சாளர்களால் வழங்கபபட்டன. அவர்களுள் அருள்பணி

‘கிறிஸ்தவ இறை வேண்டல்’ (இயேசு கற்பித்த இறைவேண்டல்). இந்த கற்றலானது திருஅவை அறிக்கையிடுவது என்ன, திருஅவை எதைக் கொண்டாடுகிறது, திருஅவை வெளிப்படுத்தும் மற்றும் ஆழப்படுத்தும் நம்பிக்கை ஆகியவற்றில் பங்கேற்பாளர்களுக்குக் கற்றுத்தந்தது.

நிறைவாக, செபமாலை அன்னை பங்கில் நடைபெற்ற சான்றிதழ் வழங்கும் நிகழ்வின் போது, மறைக்கல்வி ஆசிரியர்கள் கையாளக்கூடிய பாட நடவடிக்கைகளை குறித்தும் டாக்டர் ஸ்டீவன் செல்வராஜூ அவர்கள் செய்முறை குழு பயிற்சிகள் வாயிலாக பகிர்ந்துகொண்டார். சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சியில் கோலாலம்பூர் உயர் மறைமாவட்டத்தின் மறைக்கல்விக்குப் பொறுப்பான அருள்தந்தை டேவிட் அருள்நாதன் உடனிருந்து அனைவரையும் அவர்களது அர்ப்பணிப்புக்காகப் பாராட்டினார்.

# திருஅவையில் யூபிலி ஆண்டு 2025 – ஆணை மடல் பகுதி - 3

அன்புக்குரியவர்களே யூபிலி ஆண்டு 2025-ஐ முன்னிட்டு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வெளியிட்ட ஆணைமடலில் உள்ள கருத்துக்கள் குறித்து அறிந்து கொண்டு வரும் நாம் இன்றைய நம் நிகழ்வில் கிறிஸ்துவின் அன்பிலிருந்து பிறப்பெடுக்கும் எதிர்நோக்கு குறித்து ஆணைமடலில் உள்ள எண் 3-இல் இடம்பெற்றுள்ள கருத்துக்கள் குறித்துக் காண்போம்.

எதிர்நோக்கு என்பது சிலுவையில் அறையப்பட்ட இயேசுவின் அன்பில் இருந்து பிறக்கின்றது. பகைவர்களாக நாம் இருந்தாலும் சிலுவையில் அறையப்பட்ட இறைமகனாம் இயேசுவின் மரணத்தினால் நாம் அனைவரும் அவரோடு ஒப்புரவாகி அவருடைய வாழ்வால் சகோதர சகோதரிகளாக மீட்கப்படுகின்றோம். நம்பிக்கையால் உயிரூட்டப்பட்ட இயேவினுடைய வாழ்வு தூய ஆவியின் செயலால் புதுப்பிக்கப்பட்டு அசைக்க முடியாததாக எதிர்நோக்கால் வழிநடத்தப்படுகின்றது. தூயஆவி திருஅவையின் பணியில் தனது வற்றாத உடனிருப்பால் மக்களுக்கு எதிர்நோக்கின் ஒளியை பரப்புகின்றார். அணையாத சுடராய் நம் வாழ்க்கைக்கு ஆதரவையும் உறுதியையும் தருகின்றார்.

கிறிஸ்துவின் மீது கொண்டுள்ள அன்பினை அடிப்படையாகக் கொண்ட கிறிஸ்தவ எதிர்நோக்கு என்பது ஏமாற்றாது, ஏமாற்றமடையாது. கிறிஸ்துவின் அன்பிலிருந்து நம்மைப் பிரிக்கக் கூடியது எது? வேதனையா? நெருக்கடியா? இன்னலா? பட்டினியா? ஆடையின்மையா? இடரா? சாவா? எதுதான் நம்மைப் பிரிக்க முடியும்?

**தூயஆவி திருஅவையின் பணியில் தனது வற்றாத உடனிருப்பால் மக்களுக்கு எதிர்நோக்கின் ஒளியை பரப்புகின்றார். அணையாத சுடராய் நம் வாழ்க்கைக்கு ஆதரவையும் உறுதியையும் தருகின்றார்.**

கிறிஸ்துவின் அன்பிலிருந்து நம்மை எதுவும் பிரிக்க முடியாது. எனவே எதிர்நோக்கு சிரமங்களுக்கு இடமளிக்காது. நம்பிக்கையினை அடிப்படையாகக் கொண்டு பிறரன்புச் செயல்களினால் ஊட்டமளிக்கப்படுகின்றது. நமது வாழ்க்கையில் நாம் முன்னேறிச் செல்ல உதவுகின்றது. எனவே தான் தூய அகுஸ்தீன் எந்தவிதமான வாழ்க்கையிலும் ஒருவரால் ஆன்மாவின் நம்பிக்கை அன்பு எதிர்நோக்கு இல்லாமல் வாழ முடியாது என்று எடுத்துரைக்கின்றார்.

## திருவருகைக்காலம் பற்றி இறைமக்கள் அறிந்துக் கொள்ள வேண்டிய பத்து படிப்பினைகள்

**1. திருவருகைக் காலத்தின் நோக்கம் என்ன?**

திருவருகைக் காலம் கத்தோலிக்க திருவழிபாட்டு காலத்தின் ஆரம்பம். திருவழிப் பாட்டிற்கான பொதுவிதி முறைகள் (39) கூறும் திருவருகைக் காலத்தின் இரண்டு பண்புகள்:

இறைமகன் மனிதரிடையே முதல் முறை வந்ததை நினைவு கூறும் கிறிஸ்துப்பிறப்புப் பெருவிழாக் கொண்டாட்டங்களின் தயாரிப்புக் காலம் ஆகும். அவ்வாறே காலத்தின் நிறைவில் நிகழும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை எதிர்பார்த்திருக்க உள்ளங்கள் தூண்டப்படும் காலமும் அதுவே. இவ்விரு காரணங்களால் திருவருகைக் காலம் இறைப்பற்றும் மகிழ்ச்சியும் நிறைந்த எதிர்பார்ப்பின் காலமாக விளங்குகின்றது.

**2. திருவருகைக் காலத்தில் பயன்படுத்தப்படும் நிறங்கள் யாவை?**

திருவுடைகளின் நிறத்தைப் பொறுத்த மட்டில் மரபுவழிப் பயன்பாடு பின்பற்றப்பட வேண்டும். அதாவது : ஊதா நிறம்: திருவருகைக் காலத்திலும் தவக் காலத்திலும் ஊதா நிறம் பயன்படுத்தப்படும். (GR 346d ) இளஞ்சிவப்பு நிறம் வழக்கத்தில் இருப்பின் திருவருகைக் கால 3ஆம் ஞாயிறு அன்று ("மகிழுங்கள்") இளஞ்சிவப்பு நிறம் பயன்படுத்தப் படலாம். (GIRM 346f)

**3. திருவருகைக் காலம் துக்கமான காலமா? அல்லது மனவருந்தத்திற்கான காலமா?**

திருவருகைக் காலம் துக்கமான, மனம் வருத்த அல்லது தவத்திற்கான காலமல்ல. ஊதா நிறம் வழிபாட்டு நிறமாக இருந்தாலும் திருஅவை சட்டம் 1250 குறிப்பிடுவதுபோல ஆண்டின் எல்லா வெள்ளிக்கிழமைகளும் மற்றும் தவக் காலத்தின் அனைத்து நாட்களுமே மனவருத்தத்தின் காலங்களாகும்.

*தொடர்ச்சி, அடுத்த இதழில்*

# உள்ளத்திலும் இல்லத்திலும் இயேசு கிறிஸ்துவே அரசர்

இன்று, திருஅவையின் திருவழிபாட்டு ஆண்டின் இறுதி ஞாயிற்றுக்கிழமை. இன்று நாம் கிறிஸ்து அரசர் பெருவிழாவைக் கொண்டாடுகிறோம். இன்றைய முதலாம் வாசகமும் (தானியேல்7:13-14), இரண்டாம் வாசகமும் (திருவெளிப்பாடு 1:5-8), உலக நிறைவுப் பற்றி முன்னுரைக்கும் புத்தகங்களிலிருந்து எடுக்கப்பட்டவை. வேதகலாபனை, துன்புறும், போர், பஞ்சம் போன்ற காலக்கட்டங்களில் நம்பிக்கையாளர்களுக்கு ஊக்கமூட்டும் வகையில் இப்புத்தகங்கள் எழுதப்பட்டவை.

நற்செய்தியில் (யோவான்18:33-37), தலைமைக்குரு கயபாவும் யூதர்களும் இயேசுவுக்கு மரணத்தண்டனைக் கிடைக்க வேண்டும் என்ற வஞ்ச எண்ணத்துடன் அரசியல் குற்றஞ்சாட்டுகள் சுமத்தப்பட்ட இயேசு கிறிஸ்து, உண்மையில் “அரசன்” என்பது வெளிப்படுத்தப்படுகிறது. யூதரல்லாத ஆளுநர் பிலாத்து, அரசன் எனக் கூறுவதை இயேசு மறுக்கவில்லை. (மாற்கு15:2). ஆயினும், “எனது ஆட்சி இவ்வுலக ஆட்சி போன்றது அல்ல” (யோவா.18:36) என அவர் விவரிக்கிறார்.

இன்று நமது மனதைத் தொட்டுப் பார்தோமானால், நம்மை ஆட்டிப்படைக்கும் அரசர் யார்? காலையில் எழுந்த உடன், நமது கண் தேடுவதென்ன? எந்நேரமும் நம் உள்ளங்கையில் தவழ்வதென்ன? வீட்டை விட்டு வெளியே செல்லும் போது மறக்காமல் எடுத்துச் செல்வதென்ன? அது இல்லாமல் நாளே நகராது என கூறுவதென்ன? அது கைப்பேசி என்பதை நாம் அனைவரும் ஒப்புக்கொள்வோம். கைப்பேசி போன்ற நவீன தொழில்நுட்பமும் ஊடகத்துறையும் மறைமுகமாக நம்மை ஆட்டிப் படைக்கின்றன என்றால் அது பொய் அல்ல. ஒவ்வொரு வீட்டிலும், பெற்றொருக்கும் பிள்ளைகளுக்கும் இடையிலான உறவில் விரிசல் அல்லது வெறுமையை ஏற்படுத்தும் வகையில் கைப்பேசி சென்றுவிட்டது என்பது இன்றைய யதார்த்தம். பாவத்தில் இருந்து மனுக்குலத்தை மீட்க, பெரிய வெள்ளிக்கிழமையன்று உயிர் நீத்த ஆண்டவரின் இடத்தை கைப்பேசி மட்டு மல்ல, இன்னும் எத்தனையோ ஆதிக்கம் செலுத்துகின்றன. அவை, பணமாக இருக்கலாம்! பாசமாக இருக்கலாம்!

கடவுளின் திருவுளப்படி, “கிறிஸ்துவும்



உங்கள் பாவங்களின் பொருட்டு ஒரே முறையாக இறந்தார்” (1பேதுரு3:18) என்பதை மனதில் நிறுத்தி, நமதாண்டவர் இயேசு கிறிஸ்துவை நமது வாழ்வின் மையமாக வைப்போம். பத்துக் கட்டளையின் முதல் கட்டளை, “என்னைத் தவிர வேறு தெய்வங்கள் உனக்கிருத்தல் ஆகாது” (விப.20:3). இக்கட்டளையை மனதிற்கொண்டு, விண்ணுலக மண்ணுலக அரசரான இயேசு கிறிஸ்து நமது உள்ளத்தையும் இல்லத்தையும் ஆட்சி செய்ய அனுமதிப்போம். மற்றவை அவரது இடத்தை ஆக்கிரமித்துக் கொள்ளாமல் இருப்பதை உறுதிசெய்வோம்.

**இயேசு கிறிஸ்து அனைத்துலக அரசர்**

| | |
|---|---|
| முதல் வாசகம்: | தானி 7:13-14 |
| திரு.பாடல் | 93: 1a-c. 1de-2. 5 |
| 2-ம் வாசகம் | திருவெ 1: 5-8 - |
| 14,18நற்செய்தி | யோவான் 18: 33-37 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 2 (B)**

**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 2**

**திருப்புகழ் மாலை:**

**கிறிஸ்து அரசருக்குரியது**